முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 223/2015

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 குமார்(எ)செந்தில்குமார் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 28.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியும்.இவ்வழக்கில் பதிலுரை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் நாங்கள் அனைவரும் தாக்கல் செய்தோம். பதிலுரையில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 398/22 ஆகும். அது நத்தம் நிலமாகும். பொதுவாக நத்தம் என்பது குடியிருப்பு பகுதி என்றால் சரிதான். ஆனால் தாவாசொத்தில் குடியிருப்புகள் எதுவும் இல்லை. காலி நத்தமாக உள்ளது. தாவா எத்தனை அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஒரு சொத்திற்குதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இரண்டு அயிட்ட சொத்துக்கள் குறிப்பிட பட்டிருந்தால் அது தவறா என்றால் ஆமாம். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். அப்போது நானும், என் வழக்கறிஞரும் உடன் இருந்தோமா என்றால் இருந்தோம். நீதிமன்ற ஆணையர் அ றிக்கை தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அறிக்கை பற்றிய விபரம் தெரியமலேயே ஆட்சேபணை மனு தாக்கல் செய்தோமா என்றால் நான் ஆட்சேபணை செய்யவில்லை. சர்வே எண். 398/17 வாதியின் வீடு ஆகும். சர்வே எண்.398/22 கோயில் இடமாகும். சர்வே எண்.398/22 கோவில் இடம் எனக்காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சர்வே எண்.398/22 கோவில் இடம் என வருவாய்த்துறை ஆவணங்களில் கண்டுள்ளதா என்றால் பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ளோம். பட்டா இன்னும் வரவில்லை.

3) தாவா இரண்டு அயிட்ட சொத்திற்கு வடக்கே கிழமேல் பஞ்சாயத்து ரோடு உள்ளது என்றால் சரிதான். தெற்கே ரோடு உள்ளது என்றால் சரியல்ல. வீடு உள்ளது. தாவா 2ம் அயிட்ட சொத்திற்கு மேற்கில் காலியிடம் உள்ளதா என்றால் சர்வே எண்.398/17 க்கு மேற்கே சர்வே எண்.398/22 காலியிடம் உள்ளது. காலியிடம் எவ்வளவு விஸ்தீர்ணம் என்றால் சுமார் 3 செண்ட் ஆகும். தாவா முதல் அயிட்ட சொத்திற்கு கிழக்கே எனது வீடு உள்ளது. எனது வீட்டிற்கும், வாதியின் முதல் அயிட்ட சொத்திற்கும் இடையே சுற்றுச்சுவர் உள்ளதா என்றால் வாதி அவர்வீட்டிற்கு

சுற்றுச்சுவர் போட்டுக்கொண்டார். எனது வீட்டின் சர்வே எண் என்ன என்றால் ஞாபகமில்லை. சர்வே எண்.398 ஆகும். உட்பிரிவு எண் தெரியவில்லை. எனது வீட்டிற்கு தெற்கே ரோடு உள்ளதா என்றால் இல்லை. வீடு உள்ளது. அதற்கடுத்து தார்ரோடு உள்ளது.

4) ரோட்டிற்கு வடக்கே யாருடைய வீடு உள்ளது என்றால் பெருமாள் கவுண்டர் வீடு உள்ளது. தாவா 2 ம் அயிட்ட சொத்திற்கு வடக்கேயும்,தெற்கேயும் வேலி உள்ளதா என்றால் இல்லை. ராஜலிங்கம் வீடு உள்ளது. வாதி எனது பெரியப்பா மகன். எங்கள் அனைவருக்கும் ஒரே இடத்தில் கோவில் உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண்.398/22 ல் அனைவருக்கும் சேர்ந்து ஒரு கோவில் வீடு உள்ளது. கோவில் வெவ்வேறு மூன்று இடங்களில் உள்ளது.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**